DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 10

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் ராஜேஸ்வரி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of June 2024.

(Accused absent. Petition u/s.317 Crpc filed and allowed)

முதல் விசாரணை :

1. நான் தற்போது பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சீனியர் அசிஸ்டன்ட் சர்ஜனாக பணிபுரிந்து வருகிறேன். நான் பணியில் இருந்தபோது கடந்த 19.08.2016 அன்று மாலை 07.00 மணியளவில் மகேஸ்வரி என்ற பெண் தலைமைக்காவலர் 1451 என்ற நபர் மூலமாக திருமணமாகாத பிருந்தா என்ற நபரையும் அவரது தாயாரையும் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்.

2. மேற்படி பிருந்தா கடந்த 3 மாதங்களாக மாதவிடாய் ஆகவில்லை என்றும், 17.05.2016 அன்று இரவு 10.00 மணிக்கு தெரிந்த நபர் ஒருவர் தன்னை கற்பழித்ததாக என்னிடம் கூறினார். அதுபோன்று ஏற்கனவே அந்த நபர் தன்னிடம் பலமுறை நடந்துகொண்டார் என்று சொன்னார். மேற்படி பிருந்தா ஏற்கனவே ஒரு தனியார் மருத்துவமனையில் தான் கர்ப்பமுற்றது குறித்து பரிசோதனை செய்துள்ளார். மேற்படி பிருந்தாவை நான் பரிசோதனை செய்ததில் அவர் 14 வாரங்கள் கர்ப்பமாக இருந்ததை தெரிந்துகொண்டேன்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு நான் வழங்கியதுதான். அந்த விபத்துபதிவேடு **அசாஆ 5** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. என் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிருந்தா கர்ப்பமுற்றிருந்தார் என்று நான் எவ்வாறு தெரிந்துகொண்டேன என்றால் அவர் ஏற்கனவே தனியார் மருத்துவமனையில் எடுத்திருந்த ஸ்கேன் ரிப்போர்டை கொண்டு வந்திருந்தார் மேலும் எங்கள் அரசு மருத்துவமனையிலும் நான் ஸ்கேன் செய்து பார்த்தேன். அது குறித்து அசாஆ 5 ல் நான்குறிப்பிட்டு கூறியுள்ளேன்.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.